
சமயமெய்த் தூவலர் தூவலர்



நீதியரசர் ஒதுக்கியவர் எவரோ?

ஒதுக்கிய நிதியினை ஒதுக்கியவர் எவரோ?

தி.மு.க. அறக்கட்டளை
ஆய்வக நூல்நிலையம்
சென்னை-18.
தென்னக அறிவாலயம்

மேலவையில்

தலைவர் கலைஞர்

1980

தலைமைக் கழக வெளியீடு
திராவிட முன்னேற்றக் கழகம்
508, அண்ணாசாலை, சென்னை-600 018.

1986 - ஜூன்

3955
க 894.8115 அ
ஒசூர்

விலை ரூ. 3-00

அச்சிட்டோர் :
கயல் அச்சகம்
155, பீட்டர்ஸ் ரோடு
சென்னை - 600 086

இந்நூல் . . .

சட்டமன்ற மேலவையில், எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள், தமிழக அரசின் 1986-87க்கான நிதி நிலை அறிக்கையின் மீது நடைபெற்ற விவாதத் தின் போது, 3.4.1986 அன்று ஆற்றிய பேருரையை இந்நூல் வடிவில் தலைமைக் கழகம் வெளியிடுகிறது.

சி. டி. தண்டபாணி
கழக வெளியீட்டுச் செயலாளர்

ஒதுக்கிய நிதியினை ஒதுக்கியவர் எவரோ?

மாண்புமிகு தலைவர் அவர்களே,

1986—87ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அவையில் வைத்துள்ளதையொட்டி, கடந்த சில நாட்களாக நடை பெறுகிற விவாதங்கள் மூலமாக விமர்சிக்கப்படுவதைத் தொடர்ந்து, திராடவி முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இந்த அறிக்கையின் மீது கூற விரும்புகிறேன்.

முதலில் நிதியமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த அறிக்கையில் ''இந்தியா முழுவதும் தழுவிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைப் பொருளாதாரம், புதிய வரிகள்—ஆயத் தீர்வை — ஏற்று மதி இறக்குமதி வரிகள் போன்றவற்றால் ஏற்படும் இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்வு — உரம், இரும்பு, நிலக்கரி போன்றவற்றின் விலைஉயர்வு, இரயில் போக்குவரத்து கட்டண உயர்வு - டீசல், பெட்ரோல் போன்ற எண்ணெய்களின் விலை உயர்வு போன்றவை தமிழக அரசின் பொருளாதாரத்தையும் தமிழக மக்களின் பொருளாதாரத்தையும் பாதிக்கவே செய்திருக்கின்றன'' என்கிற உண்மை இந்த அரசால் ஒப்புக் கொள்ளப்பட்டு, வேறு மாநில முதலமைச்சர்கள் எல்

லாம் இப்படிப்பட்ட விலை உயர்வு அறிவிக்கப்பட்ட நேரத்தில் தங்களுடைய கண்டனங்களை தெரிவித்திருந் தாலும் கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் சார்பாக அப்படிப்பட்ட கண்டனங்கள் தெரிவிக்கப்படா விட்டாலுங்கூட, இது ஏழையெளிய நடுத்தர மக்களைப் பாதிக்கக்கூடிய ஒன்று என்பதை நிதியமைச்சர் அவர்கள் உணர்ந்து இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது பாராட்டத் தக்க ஒன்றாகும்.

மற்றொன்று, ''இந்திய நிலப்பரப்பைக் காப்பாற்று வதற்கு ஏற்ற வலிவான இந்தியாவும், மக்களை வாழ வைப்பதற்கு ஏற்ற வளமான மாநிலங்களும் அமைய வேண்டும்'' என்ற கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார்கள். இந்திய ஒருமைப்பாட்டிற்கு உட்பட்ட மாநிலத் தன் னாட்சி அமைய வேண்டும்; அதற்கான ஆக்கம் ஏற்பட வேண்டும்.

''கூட்டாட்சி அமைப்பில் மாநிலத் தன்னாட்சிக் கோட்பாடு என்பது ஒரு அரசியல் கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு பல்வேறு அரசியல் தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது'' என்ற கருத்தையும் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார் கள். இது தொடர்ந்து 2, 3 ஆண்டுக் காலமாக ஆளும் கட்சியில், குறிப்பாக இந்த அரசில் ஏற்பட்டுள்ள ஒரு முன்னேற்றம் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன்.

ஏனென்றால் மாநில சுயாட்சி என்ற அந்தச் சொற் றொடரேகூட அறிஞர் அண்ணா அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றல்ல என்ற கருத்து ஆளும் கட்சி உறுப்பினர்களால் 1974 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து

சொல்லப்பட்டு 1974 ஆம் ஆண்டில் சட்டப்பேரவையிலே மாநில சுயாட்சி தீர்மானம் கொண்டு வரப்பட்டு அது நிறைவேற்றப்பட்ட அந்தக் காலக் கட்டத்திலே கூட ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்த அந்தக் கொள்கையை இன்றைக்கு நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையின் வாயிலாக அண்ணா அவர்களின் அந்தக் கருத்து தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்று கூறியிருப்பது வரவேற்கத் தக்கது என்ற அளவில் நான் அதனையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கை தமிழ்ப் பதிப்பில் 23 ஆம் பக்கத்தில் நிதியமைச்சர் அவர்கள் மொத்த நிதிநிலைமைபற்றி எடுத்துக்கூற விரும்புகிறேன் என்று கூறியிருக்கிறார். ஆனால் கடந்த ஆண்டுகளில் எல்லாம் ஒவ்வொரு ஆண்டும் வருவாய் கணக்கில் வரு வாயையும், வருவாய் கணக்கில் செலவையும் குறிப்பிட்டு விட்டு, நடப்பாண்டு வருவாய் கணக்கின் வருவாயையும். வருவாய் கணக்கின் செலவையும் குறிப்பிடுவது வழக்கம், இந்த பல்லாண்டுகால நிதிநிலை அறிக்கை உரை முறையை இந்த ஆண்டு மாற்றி மொத்த நிதிநிலை பற்றி வருவாய்க் கணக்கில் வரவும் செலவும் அமைச்சர் படித்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடவில்லை. ஆனால் "பட்ஜெட் மெமோரெண்டம்'—நிதிநிலைகுறிப்பு என்ற தனிப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு வேளை உறுப்பினர்கள் எல்லாம் நிதிநிலை அறிக்கையை மாத்திரம் படித்துவிட்டு பெரிய புத்தகத்தை படிக்காமல் இருந்துவிடுகிறார்கள் என்பதற்காக, வருவாய் கணக்கு எவ்வளவு, செலவு எவ்வளவு என்பதை ஆராய்ந்து அறிந்துகொள்ள உறுப்பினர்களுக்கு வேலை தருகிற வகையில் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடவில் லையோ என்று சந்தேகப்படுகிறேன். அப்படியிருந் தாலும் அப்படி குறிப்பிடப்பட்டுள்ள அந்த விவரத்திலே

கூட சில குழப்பங்கள் உருவாகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

நிதி நிலைக் குறிப்பில் ஏனிந்தக் குழப்பம் ?

இந்த நிதிநிலைக்குறிப்பில்- தமிழில் தரப்பட்டுள்ள குறிப்பில்- ''1985-86ஆம் ஆண்டுக்குரிய வரவு—செலவுத் திட்டம், சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டபோது வருவாய்க்கணக்கின் வருவாய் ரூபாய் 2,368.46 கோடியாகவும், செலவு ரூபாய் 2,314.86 கோடியாகவும், வருவாய்க்கணக்கில் 53.60 கோடி உபரியாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வருவாய்க் கணக்கு வரவில் 209.68 கோடியும், வருவாய்க் கணக்கு செலவில் 42.03 கோடியும் இருக்கும் என்று கடைசியாகத் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் காட்டுகின்றன.''

இதை மாத்திரம் படித்தால் உறுப்பினர்கள் பெரும் குழப்பத்திற்கு ஆளாவார்கள். ஏனென்றால் 1985—86 ஆம் ஆண்டில் திட்டமதிப்பீட்டில் வருவாய்க் கணக்கு வரவு ரூபாய் 2,368 கோடி என்று சொல்லிவிட்டு திருத்திய மதிப்பீட்டில் 209 கோடி ரூபாய்தான் என்று அச்சிடப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திலே வழங்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையிலே இந்தத் தவறு இல்லை. ஆங்கிலப் புத்தகத்தில் இடம் பெற்றிருந்த 'Increase' என்ற ஆங்கிலச் சொல் தமிழ் பதிப்பில் விடப்பட்ட காரணத்தால், ரூ. 2,368 கோடியிலே இருந்த வருவாய்க் கணக்கு வரவு ரூபாய் 209 கோடியாக குறைந்துவிட்டது போன்ற தோற்றத்தை மாத்திரமல்ல, குழப்பத்தை உருவாக்கும்.

"Latest estimates, however, indicate an increase of Rs. 209.68 crores in the Revenue Receipt as well as an increase of Rs. 42.03 crores on Revenue Expenditure.

ஆங்கிலப் பதிப்பை படித்தால் தான் தமிழிலே உள்ள குழப்பத்தைப் போக்க முடியும் என்பதை மாண்புமிகு தலைவர் அவர்களே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் :- ஒரிஜினலாக தமிழிலே எழுதி பிறகு ஆங்கிலத்திலே மொழி பெயர்க்க வில்லை. ஆங்கிலத்திலே எழுதி தமிழில் மொழிபெயர்ப்பது என்பது நீண்டகாலமாக நடந்து வருகிறது. அதை மாற்றினால் நல்லது.

தலைவர் கலைஞர் : தலைவர் அவர்களே, தாங்களே 'ஒரிஜினல்' என்ற வார்த்தையைத்தான் பயன் படுத்தினீர்கள். எனவே அந்த அளவுக்கு ஆங்கிலம் நம்மோடு இருக்கிறது.

திட்டங்களை நிறைவேற்றாத அரசு !

வருவாய் கணக்கில் 1985-86ல் திட்ட மதிப்பீடு, பட்ஜெட் எஸ்டிமேட் ரூ. 2368-46 கோடி வரவு. திருத்திய மதிப்பீடு ரீவைஸ்ட் எஸ்டிமேட் ரூ. 2,578.14கோடி வரவு என்று இருக்கின்றது. அதாவது வரவில் ரூ. 209 கோடி அதிகமாகக் காட்டப்பட்டிருக்கின்றது. 1985-86 வருவாய்க் கணக்கில் செலவு ரூ. 2,314.86 கோடி என்று காட்டப்பட்டிருக்கின்றது. திருத்திய மதிப்பீடு ரூ. 2,356.89 கோடி என்று காட்டப்பட்டிருக்கின்றது. எனவே திருத்திய மதிப்பீட்டின்படி செலவு 42 கோடி ரூபாய்தான் அதிகமாகி இருக்கிறது.

இந்த ஒப்புவமையை நாம் உற்று நோக்க வேண்டும். அதாவது வருவாய் கணக்கிலே ரூ. 209 கோடி அதிகமாக இருக்கிறது. செலவு கணக்கில், திருத்த மதிப்பீட்டில் ரூ. 49 கோடிதான் அதிகமாகி இருக்கிறது. இது நாம்

செலவழிப்பதற்காக ஒதுக்கிய, திட்டங்களுக்காக ஒதுக்கிய பணம் சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்பதைத்தான் சூசகமாகத் தெரிவிக்கிறது. இந்த ரூ. 42 கோடி திருத்த மதிப்பீட்டில் அதிகமாக ஆகியிருக்கிறது என்பதை நோக்கும்போது, அதிலே கூட நிதி அமைச்சர் அவர்கள் தங்களுடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற ரூ.60கோடி வெள்ள நிவாரணச்செலவையும் கழித்து விட்டால், நீங்கள் செலவழிக்க திட்டமிட்டதிலேயே ரூ. 18 கோடியை செலவழிக்கவில்லை என்ற உண்மையும் புலனாகிறது. செலவு கணக்கில், திருத்திய மதிப்பீடு ரூ. 2,356.89 கோடி என்று இருந்தது. அரசு சரியாக செலவழிக்காத காரணத்தினால், அதிலே ரூ. 60 கோடி வெள்ள நிவாரண நிதி என்று ஒதுக்கப்பட்டு விட்ட காரணத்தால், நீங்கள் திட்டமிட்டதிலேயே 18 கோடி செலவழிக்காமல், ரூ. 2,296.89 கோடிதான் செலவாகிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

எப்போதுமே திட்டமதிப்பீட்டை விட திருத்த மதிப்பீடு—ரிவைஸ்ட் எஸ்டிமேட்—சற்று அதிகமாகவே இருக்கும். ஆனால் இந்த அரசு 209 கோடியை வரவுக் கணக்கிலே அதிகமாகக் காட்டி விட்டு, செலவுக் கணக்கிலே ஒதுக்கிய பணத்தை செலவழிக்காமல் திட்டப் பணிகளை நிறைவேற்றாத அரசாக இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது.

மேலும் இதற்கு எடுத்துக் காட்டு வேண்டும் என்றால் 1985-86 பட்ஜெட் எஸ்டிமேட்டில் திட்ட மதிப்பீடு வருவாய் கணக்கில் ரூ. 53.60 கோடி உபரி-சர்ப்பிளஸ்—என்று குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. 1985-86 திருத்திய மதிப்பீட்டில் உபரி இதிலே 221.25 கோடியாக உயர்ந்திருக்கின்றது. இந்த உபரி உயர்ந்து இருப்பதற்குக் காரணம், நான் மீண்டும் சொல்ல விரும்பு

கிறேன், திட்டப்பணிகள் செம்மையாக நடைபெற வில்லை என்பதுதான் என்னுடைய குற்றச் சாட்டாகும்.

திட்டங்களுக்காக வகுத்து ஒதுக்கப்பட்ட தொகை ஒழுங்காகச் செலவழிக்கப்படவில்லை என்பதற்கு எடுத் துக்காட்டுக்கள் தரவேண்டுமென்றால், ஐ. ஆர். டி. பி., ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் இன்டக் ரேட்டட் ரூரல் டெவலப்மெண்ட் புரோகிராம். இதற்கு 1985-86 திட்டமதிப்பீடு 29.5 கோடி ரூபாய். ரிவைஸ்ட் எஸ்டிமேட், திருத்திய மதிப்பீடு 17.55 கோடி ரூபாய் ஆக இருக்கின்றது. கடந்த ஆண்டு இந்த ஐ. ஆர். டி. பி. திட்டத்திற்கு 12 கோடி ரூபாய் குறை வாகச் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு 14.61 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆக இந்த ஆண்டு மேலும் 3 கோடி ரூபாய் குறைக்கப் பட்டிருக்கிறது.

ஊரக வேலைவாய்ப்பு தேசியத் திட்டம் (N.R.E.P.) 1985—86-ல் திட்டமதிப்பீடு—53.48 கோடி ரூபாய். ஆனால் திருத்திய மதிப்பீடு, 40.81 கோடி ரூபாய். சுமார் 13 கோடி ரூபாய் இதிலே குறைத்து செலவழிக் கப்பட்டிருக்கிறது.

அடுத்து, RLEGP இதற்கு நிதிநிலைக் குறிப்பிலும், பட்ஜெட் மெமோரண்டத்திலும் சொல்லப்பட்டுள்ள விளக்கம்.

Prime Minister's Employment Guarantee scheme for Rural landless labourers.

பிரதமரின் கிராமப்புற நிலமற்ற தொழிலாளர் வேலை வாய்ப்பு உத்திரவாத திட்டம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தில் 1985-86ல் பட்ஜெட் எஸ்டிமேட் 65 கோடி ரூபாய். ஆனால்

திருத்திய மதிப்பீடு 34.43 கோடி ரூபாய். எனவே கடந்த ஆண்டு 31 கோடி ரூபாய் குறைவாகச் செலவழித்தவர்கள், இந்த ஆண்டும் அதே 34 கோடி செலவழிக்கப் போவதாக 1986-87ல் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எனவே மாநில அளவிலே இந்த வரவு செலவுத் திட்டத்தின் அடிப்படையில் நிறைவேற்றப் போகிற திட்டத்தில் இந்த அளவுக்கு பெருந்தொகை குறைக்கப் பட்டு, செலவழிக்கப்படாமல் இருப்பது அந்தத் திட்டங்கள் ஒழுங்காக நிறைவேற்றப்படவில்லை என்பதற்கு இவைகள் எல்லாம் எடுத்துக் காட்டாகும்.

எந்தத் திட்டத்திலும் ஏமாற்றமே !

அடுத்து 1986—87 மாநில ஆண்டுத் திட்டம்—ஆன்யுவல்பிளான்—இதைப் பற்றி பக்கம் 27—ல் பட்ஜெட் மெமோரண்டத்தில், நிதிநிலைக் குறிப்பில் என்ன கூறப்பட்டிருக்கிறதென்றால், 1985—86 வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதைவிட இப் போது அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப் பிடப் பட்டுள்ளது. ஆனால் 1985—86 மாநிலத் திட்டம் பட்ஜெட் எஸ்டிமேட்டில் 1102.05 கோடி ரூபாய் என திட்ட மிட்டு ஒதுக்கி விட்டு, திருத்திய மதிப் பீட்டில், ரிவைஸ்டு எஸ்டிமேட்டில் 1068. 89 கோடி ரூபாய் என்று குறைத்திருப்பதைக் காணும்போது சுமார் 34 அல்லது 35 கோடி ரூபாய் திட்டப் பணிகளுக்குச் செலவழிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

சேர்மையாக, விரைவாகத் திட்டமிட்டு பணி கள் நடைபெறவில்லை என்பதற்கு இது மற்றொரு உதாரணமாகும். நடப்பு ஆண்டுக்கு 1199 கோடி ரூபாய் என ஒதுக்கி உள்ளார்கள் என்றாலும், கடந்த ஆண்டு அனுபவத்தைப் பார்க்கும்போது இதையாவது

முழுமையாகச் செலவழிப்பார்களா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. மாநில ஆண்டுத் திட்டத்தில், முக்கிய மான தனித் தலைப்புகளை பார்க்கும்போதும் எனக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது.

பட்ஜெட் மெமோரண்டம் பக்கம் 27ல் ரிசர்ச் & எஜூகேஷன்-ஆராய்ச்சியும், கல்வியும் என்ற தலைப்பில் 85—86 திட்ட மதிப்பீடு 4.90 கோடி ரூபாய். திருத்த மதிப்பீடு 85—86ல் 3.57 கோடி ரூபாய். அதாவது 1.33 கோடி ரூபாய் குறைவாகச் செலவிடப் பட்டிருக்கிறது. ஸ்பெஷல் ஏரியா ப்ரோக்ராம் பார் ரூரல் டெவலப்மெண்ட்—இது முக்கியமானது—ஊரக வளர்ச்சி சிறப்பு பகுதி திட்டம். இதற்கு 1985—86 ஆன்யுவல் பிளானில் 41.75 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டது. ஆனால் திருத்த மதிப்பீட்டில் 30.08 கோடி ரூபாய்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது 11.67 கோடி ரூபாய் குறைத்து செலவிடப்பட்டிருக் கிறது.

இந்த ஆண்டு பார்த்தால் ஊரக வளர்ச்சி சிறப்புப் பகுதித் திட்டத்தில் மேலும் குறைக்கப்பட்டு 25.86 கோடி என்றுதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஆன் யுவல் பிளான், மாநில ஆண்டுத் திட்டத்தை ஒழுங்காக— தீவிரமாக நடத்துவதற்கு பயன் படாது என்று மாண்பு மிகு நிதி அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மேலும் பார்த்தால், சமுதாய நல வளர்ச்சி—இது முக்கியமான தலைப்பு. இதில் 1985-86 திட்ட மதிப் பீடு பட்ஜெட் எஸ்டிமேட் 28.07 கோடி ரூபாய். ஆனால் 25 கோடி ரூபாய்தான் அதற்கு திருத்த மதிப்பீட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டையும் பார்க்கும்

போது, 3 கோடிக்கு குறைவாகச் செலவிட்டு, இந்த ஆண்டு மீண்டும் மூன்று கோடி குறைத்து, 22.53 கோடி ரூபாய் என்ற அளவுக்குத் தான் சமுதாய நலத் திட்டத் திற்காக பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பாசன மேம்பாடு மிக முக்கியமான ஒன்று என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இதிலே 1985-86 திட்ட மதிப்பீடு 63.62 கோடி ரூபாய். ஆனால் திருத்த மதிப் பீடு 52.97 கோடி ரூபாய். சுமார் 11 கோடி ரூபாய் குறைந்து செலவிடப்பட்டிருக்கிறது. மின்விசை மேம் பாட்டுக்காக 1985-86ல் போட்ட திட்ட மதிப்பீடு ரூபாய் 325.93 கோடி. ஆனால் திருத்த மதிப்பீடு வெறும் 300 கோடி ரூபாய். இதிலே 25 கோடி ரூபாய் செலவழிக்கப்படவில்லை.

குடிநீர் வழங்கலும் கழிவுநீர் அகற்றலும் என்பது மிக மிக அத்தியாவசியமான பிரச்சினை. இதில் 1985—86க் கான திட்ட மதிப்பீடு 153 கோடி ரூபாய். ஆனால் திருத்த மதிப்பீட்டில் செலவிடப்பட்டதோ வெறும் 123.18 கோடி ரூபாய். ஆக, 30 கோடி ரூபாய் செல விடப்பாடவில்லை.

சமூக நலத்திற்காக 1985-86ல் பட்ஜெட் எஸ்டிமேட் படி ஒதுக்கப்பட்டது 43.85 கோடி ரூபாய், ஆனால் செலவழிக்கப்பட்டதோ 40.62 கோடி ரூபாய், எனவே 3 கோடி ரூபாய் குறைத்து செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆண்டு அந்த 40 கோடி ரூபாயும் 39 கோடி ரூபாய் என்று ஆகி 1 கோடி ரூபாய், ஆண்டுத் திட்டத்தில் குறைக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் 16 வது பக்கத்தில் 21 வது பாராவில் ஒன்றை குறிப்பிட்டிருக்கிறார்.

மதுவிலக்கு வருவாய் – மகத்தான சந்தேகம்

"மதுவிலக்கை நடைமுறைக்கு கொண்டு வருவதன் மூலம், 1986-87 ஆம் நிதி ஆண்டில், ரூபாய் 60 கோடி அளவுக்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும். இந்த இழப்பைக் கருத்தில் கொண்டுதான் 1986-87 ஆண்டிற் குரிய வரவு—செலவுத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அதை நானும் படித்துப் பார்த்தேன். அதற்குப் பிறகு அவர்கள் தந்திருக்கிற பெரிய புத்தகத்தில் நிதி நிலைக்கான குறிப்பையும் படித்துப் பார்த்தேன். அதில் 4வது பக்கத்தில் மாநில ஆயத் தீர்வை என்கின்ற குறிப்பு வரும்போது 1985-86ல் திருத்த மதிப்பீட்டின்படி 230.82 கோடி ரூபாய் வருவாய் மாநில ஆயத் தீர்வை மூலம் அரசு பெறுகிறது என்றும், 1986—87ல் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி 200. 42 கோடி ரூபாய்தான் வருவாய் வரும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

அப்படி என்றால் 30 கோடி ரூபாய் குறைவாக காட்டப்பட்டுள்ளது. அதற்கு காரணம் என்ன என்று கூறும் போது 1987 ஜனவரியிலிருந்து மீண்டும் மதுவிலக்கு கொள்கையை நடைமுறைக்கு கொண்டுவர உச்தேசித் துள்ளதால் மாநில ஆயத் தீர்வையின் மூலம் 30 கோடி ரூபாய் வருவாய் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

எனக்குள்ள சந்தேகம் எல்லாம், பட்ஜெட் மெமோ ரண்டத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல், ஜனவரி 87ல்இருந்து மதுவிலக்கை கொண்டு வருவதால் 30 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ள புள்ளி விவரம் சரியா, அல்லது 1986-87 நிதிநிலை அறிக்கையில் மது விலக்கை நடை முறைக்கு கொண்டு வருவதன் மூலம்

அரசுக்கு 60 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்று நிதியமைச்சர் கூறியிருக்கிறாரே: இதில் எது சரி என்பதை விளக்க வேண்டும்மென்று கேட்டுக் கொள் கிறேன்.

மற்றொன்று. இந்த அவையிலே ஓர் அமைச்சர் ஒரு கேள்விக்கு பதில் அளித்தார். எதிர் கட்சித் தலைவர் மாண்புமிகு எம். பி. எஸ். அவர்கள் அப்போது குறுக் கிட்டு சில விளக்கங்களைக் கேட்டார்கள்.

இலங்கை அகதிகள் செலவுக் கணக்கிலும் குழப்பம்

இலங்கையிலிருந்து பாதிக்கப்பட்டு வருகிறார்களே தமிழ் அகதிகள், அவர்களுக்காக இது வரை 555. 47 லட்சம் ரூபாய் செலவிட அரசால் அனுமதிக்கப்பட்டது என்று அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் திரு. இராம சாமி அவர்கள் தெரிவித்தார்கள்.

அப்போது திரு. எம். பி. எஸ். அவர்கள் குறுக்கிட்டு, 1983ல் இருந்து இதுவரை செலவிடப்பட்ட தொகை குறித்து ஒரு துணை வினா கேட்டார்கள். மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை மற்றும் மாநில அரசு ஒதுக்கி யுள்ள தொகை இரண்டுக்கும் விளக்கம் தேவை என்று சொன்னார்கள். மத்திய அரசு இதற்கான தொகையை தருவதில் காலதாமதம் ஏற்படுவதால் மாநில அரசு இதற் கான செலவுகளை முதலில் செய்து கொண்டிருக்கிறது என்று அப்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார் கள்.

அதன் பிறகு மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தாபதி அவர்கள் கேட்ட போதும்—இந்த ஸ்ரீலங்கா வாழ் தமிழர் கள் பிரச்சினையில் மைய அரசு எவ்வளவு பணம் ஒதுக்கி யிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன் என்று கேட்ட தற்கு—5 கோடியே 55 லட்சம் ரூபாய் என்று மாண்புமிகு அமைச்சர் ராமசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆனால் நிதி நிலை அறிக்கையில் ஐந்தாம் பக்கத்தில் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ''தங்கள் உயிர்களைக் காத்துக் கொள்ள, இலங்கையிலிருந்து தமிழகத்துக்குத் தப்பி ஓடி வந்துள்ள தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 1,25,000 ஆகப்பெருகியுள்ளது. இவர்களில் 32,000 பேர்கள் ஆங்காங்கு அமைக்கப் பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டு, அவர்கள் அனைவரும் தங்கள் தாயகம் திரும்பும் வரையில், இவர்களுக்கு எல்லா அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, இவர்கள் மரியாதையுடனும், மதிப்புடனும் நடத்தப்படத் தமிழக அரசு அயராது பாடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் அகதிகள் மற்றும் தாயகம் திரும்பியோர் ஆகியோரின் நிவாரணப் பணிகளுக்காகவும், மறுவாழ்வு பணிகளுக்காகவும், இதுவரை மொத்தம் சுமார் ரூ. 45 கோடி செலவிடப்பட்டுள்ளது''-என்று கூறியிருக்கிறார்கள்.

இந்த 45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கும் நிதிநிலை அறிக்கையை மேலெழுந்த வாரியாகப் பார்த்தால், தமிழக அரசே இந்தத் தொகையை ஒதுக்கியிருப்பதாகத் தோற்றம் அளிக்கும். ஆனால் கேள்விக்குப் பதில் சொன்ன மாண்புமிகு அமைச்சர் ராமசாமி அவர்கள் தெளிவாக்கியபோது, இது முழுவதும் மத்திய அரசு அளித்துள்ளது 5 கோடியே 55 லட்ச ரூபாய் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசு முழுவதையும் அளிக்கிறது என்று சொன்னது சரியா? அல்லது மாநில அரசு அளிக்கிறது என்று சொல்வது சரியா? அல்லது இது வரையில் மத்திய அரசு 5·55 கோடி ரூபாய் அளித்துள்ளது என்று அமைச்

சர் சொன்னார்களே. அது சரியா? அல்லது 45 கோடி ரூபாய் இந்தப் பணிகளுக்காக செலவிடப்பட்டது என்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது சரியா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையில் விளக்குவார்கள் என்று நான் எதிர்ப் பார்க்கிறேன்.

வரவு உயர்ந்தும் வளர்ச்சித் திட்டம் முடமானது ஏன் ?

1975-76ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி, மூலதனக் கணக்கு உட்பட அரசினுடைய வருமானம் ரூ. 563 கோடியாக இருந்தது. இப்போது வைத்துள்ள அறிக்கையின்படி, மூலதனம், வருவாய் கணக்கு இரண்டும் இணைந்த வருமானம் 3. 275 கோடி ரூபாயாக பெருகியிருக்கிறது. அதாவது ஆறுமடங்கு உயர்ந்திருக்கிறது. வருவாய் 6 மடங்காக உயர்ந்திருப்பதற்கு ஈடாக வளர்ச்சித் திட்டங்கள் 6 மடங்காக ஏற்பட்டிருக்கிறதா இந்த மாநிலத்தில் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதற்கு ஒரே பதில் 'இல்லை' என்பதுதானே தவிர, வேறல்ல. 500 கோடி ரூபாய், 300 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் என்று இருந்த நேரத்தில்,- எனக்குக்கூட நன்றாக நினைவு இருக்கிறது; 1957ம் ஆண்டு அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திராவிட முன்னேற் றக் கழக உறுப்பினர்கள் பேரவையில் இருந்தபோது, எங்கள் பக்கத்தில் திரு. எம். பி. எஸ். அவர்கள் அமர்ந் திருந்த அந்த நேரத்தில், நிதியமைச்சராக இருந்த திரு. சி. சுப்ரமணியம் அவர்கள வரவு செலவுத் திட்டத்தை அவையில் அளித்தபோது குறிப்பிட்டார்கள்.

"என்னுடைய வாழ்க்கையில் நிதியமைச்சர் பொறுப்பில் இருந்து, 100 கோடி ரூபாய்க்கான வரவு

செலவுத் திட்டத்தை இன்றைக்கு இந்த அவை முன்பு சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று குறிப்பிட்டார்கள்.

இப்படி நூறுகோடி ரூபாயிலிருந்து வளர்ந்து 500 கோடி ரூபாய் என்று பெருகி, இன்றைக்கு 3,275 கோடி ரூபாய் என்ற அளவுக்கு ஆறேழு மடங்கு அதிகமாயிருக்கிற இந்தக் கட்டத்தில், வளர்ச்சித் திட்டங்கள் எதுவும் தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிறதா என்றால் அப்படி அமையவில்லை என்பதுதான் என்னுடைய குறை என்பதை இந்த அவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

1986 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் தேதி கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையில் 23 ஆம் பக்கத்தில் ''வீடில்லாதவர்களுக்கு வீட்டு வசதிக்கு வகை செய்யும் மிகப் பெரிய திட்டத்தை அடுத்த நிதி ஆண்டில் செயல்படுத்த அரசு கருதுகிறது என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆதிதிராவிட மக்கள், பழங்குடி மக்கள், நரிக் குறவர்கள் ஆகிய மக்களுக்கு ஐந்து லட்சம் வீடுகளும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற ஏனைய குடும்பங்களுக்கு 5 லட்சம் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்படும், இந்த நலிந்த பிரிவினர்களுக்கு வீட்டு வசதியை அளிக்க வேண்டுமென்ற பாராட்டத்தக்க நோக்கத்தை மூன்றாண்டுகளில் முப்பது இலட்சம் மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டி முடித்து விட வேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் உறுதியான நோக்கமாகும்.''

இது ஆளுநர் உரையில் இந்த ஆண்டு ஜனவரி 8 ஆம் நாள் குறிப்பிட்ட வாசகம். பிப்ரவரி 23 ஆம் நாள் நடை பெற்ற உள்ளாட்சி மன்றத் தேர்தலுக்கு முன்பு பிப்ரவரி 20, 21, 22 ஆகிய நாட்களில் ஆளும் கட்சியான

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பில், உள்ளாட்சி மன்றத் தேர்தல் தொடர் பான விளம்பரங்கள் எல்லா ஏடுகளிலும் வெளியிடப் பட்டபோது, அதில் ''தாழ்த்தப்பட்டோர்—நரிக்குறவர் —நலிந்த பிரிவினர் வாழ்வில் உயர்ந்திட வழிபிறக்கிறது. 30 லட்சம் வீடுகள் மூன்றே ஆண்டுகளில்'' என்று கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் செய்யப் பட்டுள்ளது.

வாய்வீச்சுத் திட்டங்கள்

ஆனால் ஆளுநர் உரையில் ''முப்பது இலட்சம் மக்களுக்கு வீடுகள்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆளுங்கட்சி உள்ளாட்சி மன்ற தேர்தல் பிரச்சாரத்தில் ''முப்பது இலட்சம் வீடுகள் மூன்றே ஆண்டுகளில்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்நிதிநிலை அறிக் கையில் ''ஆதிதிராவிடர், பழங்குடியினர், நரிக்குறவர், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏனையோர் ஆகியோர்க்கு வீட்டு வசதிசெய்து கொடுக்கும் திட்டம் ஒன்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயல் படுத்த பெரும் முதலீடு தேவைப் படுகிறது.....'' -நாவலர் இந்த இடத்திலே பெருமூச்சு விட்டுக்கொள்கிறார்.

ஏனென்றால் அவர் எண்ணிப் பார்க்கிறார். இப்படி ஒரு திட்டம் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்த பெரும் முதலீடு தேவைப்படுகிறது என்று கூறும்போது பெரு மூச்சு விட்டுக் கொண்டு, அது எப்படி நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு நாவலர் கோடிட்டுக் காட்டுகிறார் என்றால், குடிசைவாழ் மக்களுக்குப் போதிய வசதி செய்து கொடுப்பது என்கிறார். மாண்புமிகுநாவலர்

மொழியிலேயே கூறுவது என்றால் குடிசை வாழ் மக்களுக்குப் போதிய குடியிருப்பு வசதி செய்து கொடுப்பது! ஏழ்மைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் குடியிருப்பு வசதிகளை மேம்படுத்துவது! வீடுகட்ட ஏழைகளுக்கு கடனுதவி அளிப்பது— கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வீடுகட்ட உதவுவது! தொழில் நிறுவனங்கள் மூலம் வீடு கட்டித்தர ஊக்குவிப்பது! போன்ற வகைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.'' என்று நாவலர் அவர்கள் மெதுவாக அந்த இடத்தை விட்டு தந்திரமாக நழுவுகிறார். 'கட்டித் தரப்படும்' என்ற அந்தச் சொல்லை மாற்றிவிட்டு-வசதி செய்துகொடுக்கப்படும். வசதிகள் மேம்படுத்தப்படும். கடன்உதவி அளிக்கப்படும். வீடுகள் கட்ட உதவப்படும். தொழில் நிறுவனங்கள் மூலம் வீடு கட்ட ஊக்குவிக்கப்படும். இவற்றிற்கு ஹட்கோ, வீட்டு வசதி மேம்பாட்டு நிதியுதவி நிறுவனம், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் போன்ற நிறுவனங்களின் மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, பின்னால் 26 கோடி ரூபாயை நிதி ஒதுக்கீடு செய்து இந்த வரவு செலவு திட்டத்தில் இதற்காக ஒதுக்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஓர் அரசு இப்படி 30 லட்சம் வீடுகள் அல்லது 30 லட்சம் மக்களுக்கு வீடுகள் கட்டித் தருகின்ற திட்டத்தை படிப்படியாகத்தான் நிறைவேற்றும் என்பது நாவலருக்குத் தெரியும். என்ன செய்வது, நாவலருக்கே கூடப் பிடிக்காத சில திட்டங்கள் தீவிரமாக அறிவிக்கப்பட்டு விடுகின்றன. திட்டங்கள் பிடிக்காது என்றல்ல. அவசர அறிவிப்புகள் அவருக்கு பிடிக்காது என்பது அவரோடு நான் பல ஆண்டுக்காலம் பழகியவன் என்ற முறையில் நன்கு புரிந்து கொண்டிருப்பவன். அந்தக் காரணத்தினால்தான், ''நான் என்ன செய்வது? ஆளுநர் உரையில் குறிப்பிட்டு விட்டார்கள் என்று பெருமூச்சு விட்டு விட்டு

இப்படியெல்லாம் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கட்டித்தரப்படும் என்றும் திட்டவட்டமாக அறிவிக்காமல், அடுத்த முறை யாராவது இதைப்பற்றிக் குறிப்பிட்டால், ''நான் கட்டித்தரப்படும் என்றா சொன்னேன். வசதிகள் செய்து கொடுக்கப்படும், வசதி கள் மேம்படுத்தப்படும் என்று அல்லவா சொன்னேன்'' என்று தப்பித்துக் கொள்ள அவருக்குத் தெரியும் என்கிற காரணத்தினால்தான் அந்த வார்த்தைகளைப் பயன் படுத்தி இருக்கிறார்.

திட்டங்கள் செயல்பட முடியாத வேடிக்கை!

ஒரு வீடுகட்ட பத்தாயிரம் ரூபாய் ஆகும் என்று வைத்துக் கொண்டால்கூட, ஏற்கெனவே ஆதிதிராவிடர் மக்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வீடுகள் கட்டும்போது 5,000 ரூபாய், 6,000 ரூபாய், 7,000 ரூபாய் என்று அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்றவாறு அதன் மதிப்பு இருந்தது. இப்போது ஒரு வீடு கட்டு வதற்கு பத்தாயிரம் ரூபாய் என்று வைத்துக் கொண் டால்கூட 30 லட்சம் வீடுகள் கட்டுவதற்கு 3000 கோடி ரூபாய் மூன்று ஆண்டுகளுக்குத் தேவைப்படும்.

ஆனால் இப்போது இந் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருக்கும் பணம் 26 கோடி ரூபாய்தான். இது போதுமா என்கிற விளக்கம் எனக்குத் தேவை. இந்த வீடுகள் யாருக்குக் கட்டித் தரப்படும் என்ற குறிப்பில்: ''வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு 30 இலட்சம் வீடுகள்'' என்று சொல்லப்படுகிறது. அப்படி 30 இலட்சம் வீடுகள் என்றாலோ அல்லது 30 இலட்சம் பேருக்கு வீடுகள் என்றாலோ அந்தக் கணக்கிலே உள்ள சில விவரங்களை நான் புரிந்துகொள்ள விரும்புகிறேன். வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள்பற்றி சில

வேறுபட்ட கருத்துக்கள் நாட்டிலே உலவிக் கொண்டிருக் கின்றன.

நம்முடைய தமிழக அரசின் சார்பில் தொழிலாளர் கொள்கைக் குறிப்பு இந்த அவையிலே வைக்கப்பட்ட போது—1981-82 ஆம் ஆண்டு தொழிலாளர் நலன் பற்றிய கொள்கைக் குறிப்பு வைக்கப்பட்டபோது— அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது :

State planning commission has estimated roughly 62% of the rural population and 53% of the urban population in the state are living below the poverty line.

62 சதவீதம் கிராம மக்களும், 53 சதவீதம் நகர்ப் புற மக்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கி றார்கள் என்று 1981-82ஆம் ஆண்டு இந்த அவையிலே வைக்கப்பட்ட புள்ளி விவரம் குறிப்பிடுகிறது.

இந்த அரசினுடைய மாநிலத் திட்டக் கமிஷனால் தயாரிக்கப்பட்ட ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற புத்தகம் 14-11-1983ல் இந்த அவையில் வைக்கப் பட்டது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் எழுதியுள்ள முன்னுரையில் ''வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண்ணிக்கை நமது மாநிலத்தில்தான் அதிகம் என்பதை வருத்தத்தோடு ஒப்புக் கொள்ள வேண்டியுள்ளது; தொழில் வளர்ச்சியில் மூன்றாவது இடத்தில் இருக்கி றோம் என்று பெருமை கொண்டாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தின் எண்ணிக்கை மிகப்பெரும் அளவில் இருக்கும் மாநிலங்களில் 3-வது இடத்தில் நாம் இருக்கி றோம்'' என்று கூறினார்கள்.

நாவலர் அவர்கள் திருப்பூரில் பேசும் போது இப்போது தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் 36.3 சதவீதம் என்ற அளவுக்குக் குறைந்திருப்பதாக கூறினார்கள், எப்படி இந்தத் திடீர் குறைவு ஏற்பட்டது என்று எனக்கு விளங்கவில்லை.

நேற்றைக்கு முன்தினம் நிதி அமைச்சர் அவர்கள் பேரவையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் 4—வது இடத்திலே இருப்பதாகக் கூறுவதாகப் பத்திரிகையிலே செய்தியை நான் படித்தேன். தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் 3-வது இடத்தில் இருக்கும் போது, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்களின் எண் ணிக்கை 50 சதவீதத்திற்கு மேலே இருந்தால் தமிழ் நாட் டில் தொழில் வளர்ச்சி 4-வது இடத்திற்கு இறங்கியுள்ள இந்தச் சூழ்நிலையில் வறுமைக் கோட்டின் சதவிகிதம் 36 என்று எப்படி குறையும்? என்று எனக்குத் தெரிய வில்லை.

ஐந்து கோடி மக்களில் 36 சதவீதம் என்ற கணக்குப் படி 1 கோடி 80 லட்சம் பேர் வறுமை கோட்டிற்கும் கீழே உள்ளவர்கள். இதில் 30 இலட்சம் பேர்களுக்கு மாத்திரம் வீட்டு வசதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மீதி 1 கோடியே 50 லட்சம் பேர்களுக்கு யார் வீடு கட்டு வது என்ற கேள்வி எழும். இந்த ஆண்டு 26 கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கி அந்தத் திட்டத்தைத் தொடங்க முடியுமா என்ற ஐயப்பாட்டுக்கு அரசு விளக்கம்தர வேண்டும். எனவே எந்த சிந்தனையும் இல்லாமல் அடிக் கடி தேர்தல் வரும் போதெல்லாம் இப்படிப்பட்ட மகத் தான, பிரம்மாண்டமான அறிவிப்புக்களை வழங்குவது இந்த அரசுக்கு வாடிக்கையாக இருக்கிறது.

முப்பது லட்சம் வீடு என்பதைப்போல்-சில ஆண்டு களுக்கு முன் அறிவிக்கப்பட்ட மற்றொரு திட்டம்.

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை, one job for each family ஏற்கெனவே 1983—84 நிதிநிலை அறிக்கையில் நம் முடைய நாவலர் அவர்கள் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற அமைப்பில் அத்திட்டங்களுக்கான விவரங் கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிதியாண்டில் 15 கோடி ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படு கிறது என்று இந்த அவையிலும் அந்த அவையிலும் படித்தார்கள்.

அப்பாவி மக்களை ஏமாற்ற ஆயிரம் அறிவிப்புகள்!

அதற்குப் பிறகு 1984-85ல் நிதிநிலை அறிக்கையை எடுத்துப் பார்த்தேன்.

அதில் 'குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை' என்ற தலைப்பையே காணவில்லை. 1985-86 நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பாாத்தேன். 1986-87 நிதி நிலை அறிக்கையையும் படித்துப் பார்த்தேன்.

எதிலும் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை' என்ற தலைப்பையே காணவில்லை. நண்பர் சுப்பு அவர்களை கேட்டால், அழகாக, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்றால், அந்தந்தக் குடும்பத்தில் அவரவர் வேலையை அவரவர் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லக் கூடும்.

க. சுப்பு : தலைவர்களே, நாவலர் அவர்கள் அன்றைக்கே இதை சொல்லிவிட்டார்கள்.

தலைவர் கலைஞர்: அதைப்போல கர்ப்பவதிகளுக்கு பிரசவ காலத்திற்கு மூன்று மாத காலத்திற்கு முன்பு 150 ரூபாய் தரப்படுமென்று ஒரு பெரிய அறிவிப்பு. அதைப் பார்த்து தாய்மார்கள் எல்லாம் இந்த 150 ரூபாய்க்காக

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மீறலாமா என்றுகூட யோசித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பிறகு நிதி நிலை அறிக்கையில் மதுரை மாவட்டத்தில் கொட்டாம் பட்டி என்ற ஊருக்கு மட்டும்தான் முதலில் அந்தப் பணம் தரப்படுமென்று சொல்லப்பட்டது. இன்றைக்கு கொட்டாம்பட்டியிலுள்ள தாய்மார்களுக்கும் தரப்பட வில்லை.

பிறகு, கொட்டாம்பட்டி தொடரவேயில்லை! அதைப் போலத்தான் சென்னையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புத் தருவது என்று சொல்லி ஒரு திட்டத்தை அறிவித்தார். 3 சக்கர வண்டிகளைத் தயாரித்து முதலில் வெள்ளோட்டமாக 5 வண்டிகளை விட்டு— அதிலே பட்டதாரிகள் காய்கறிகளை மலிவான விலையில் விற்பனை செய்வார்கள் என்றும், அவரவர் வீட்டிற்கே இந்த வண்டிகளில் கொண்டு வந்து விற் பார்கள் என்றும், வீட்டிலுள்ள பெண்டிர் அங் கேயே காய்கறிகளை வாங்கிக் கொள்கிற அளவுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் சொல்லி— இப்படி 5 வண்டிகள் 500 வண்டிகளாகப் பெருகும். பிறகு திருச்சி, கோவை, சேலம் போன்ற இடங்களில் இப்படிப்பட்ட பட்டதாரிகளுக்கு காய்கறிகளை விற்கிற மகத்தான வேலை தரப்படும் என்றும், அந்த சைக்கிள் களுக்கான ஸ்பேர் பார்ட்ஸ்—உதிரிப் பாகங்கள் செய் வதற்காகக் கிராமப்புறங்களில் தொழிற்சாலைகள் உரு வாக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. அந்தத் திட்டமும் தொடங்கியதோடு சரி, தொடரவேயில்லை.

பிறகு பாம்புக்கடி வைத்தியம் என்று திட்டம். ஒவ்வொரு ஊரிலும் பாம்புகடித்தால் அதற்கு வைத்தியம் செய்தால் அவர்களுக்கு இவ்வளவு ஊதியம் என்று சொல்லி திட்டம் தொடங்கப்பட்டது. அதற்குப்பிறகு

எங்கேயும் பாம்புகள் கடிக்காமல் பயந்து போய் விட்டனவோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அதற்குப் பிறகு அந்த திட்டம் பற்றிய விவரமேயில்லை.

இது எப்படி இருக்கிறது என்றால், ஒவ்வொரு திட்டமும் அறிவிக்கப்படும்போது பிரம்மாண்டமாக அறிவித்து விட்டு கடைசியில் ஒன்றுமில்லை என்று முடிகிறது— பஞ்சபாண்டவர்கள் எத்தனை பேர் என்றால் கட்டிற் கால்கள் போல் 3 பேர் என்று சொல்லி இரண்டு விரலைக் காட்டியதைப்போல், நீங்களும் இரண்டு விரல்களைக் காட்டியே இந்த நாட்டை ஏமாற்றி விடலாம் என்று நம்பிக்கொண்டிருக்கிறீர்கள். அதுசரியில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில்—

தொழில் வளர்ச்சியில் நம்முடைய மாநிலம் மிகவும் முன்னேற்றம் அடைந்திருப்பதாக குறிப்புகளை காட்டியிருக்கிறார்கள். மத்திய அரசு நம்முடைய மாநில தொழில் வளர்ச்சிக்குத் தேவையான பெரும் திட்டங்களை அளிக்கவில்லை என்ற குறைபாட்டை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். குறிப்பாக சேது சமுத்திர திட்டம் எத்தனையோ ஆண்டுகளாக அவ்வப்போது இருக்கின்ற தமிழக அரசாங்கங்களால்—தமிழ்நாட்டின் சார்பாக சென்றிருக்கின்ற தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்களானாலும்சரி, அ. தி. மு. க. உறுப்பினர்களானாலும் சரி, வேறு கட்சி உறுப்பினர்களானாலும் சரி, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களானாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களானாலும் சரி அவர்கள் அத்தனை பேரும் பாராளுமன்றத்திலே வலியுறுத்தி, நினைவூட்டத் தவறவில்லை.

அக்கறை காட்டாததால் அனாதையானவை !

அதைப் போலவே திண்டுக்கல்—கரூர் அகல இருப்புப் பாதை மாநில அரசு பலமுறை கோரியும், மாநில அரசின் சார்பாக பல்வேறு கட்சிகள் எதிர் கட்சியாக இருந்தாலும் கூட—எங்களைப் போன்ற கட்சிகள் வாதாடியும் கூட, பிரதமரிடம் விண்ணப்பம் தந்தும்கூட இந்த இரண்டு பெரிய திட்டங்களையும் நிறைவேற்ற மத்திய சர்க்கார் முன் வரவில்லை; அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பது எங்களுக்குள்ள மாபெரும் குறைபாடு. நாங்கள் அதைக் கண்டித்திருக்கிறோம், எதிர்த்திருக்கிறோம். அது பற்றிப் பல முறை பேசியிருக்கிறோம். ஆனாலும் கூட மத்திய அரசு தரவில்லை என்கிற அந்தக் காரணத்தை மாத்திரம் சொல்லிக் கொண்டிராமல் மாநில அரசும் தொழில் அமைச்சரும் அக்கறை காட்ட வேண்டும். அப்படி சரியான முறையில் அக்கறை காட்டப்படவில்லை என்பதற்கு என்னிடத்திலே ஒன்றிரண்டு உதாரணங்கள் இருக்கின்றன.

என்னுடைய கையிலே இருப்பது 'டிட்கோ' வெளியிட்ட ஒரு எழில் பொருந்திய மலர். இந்த மலருக்கு ஜனாதிபதி திரு. ஜெயில்சிங் அவர்கள் அக்டோபர் 15, 1985-இல் வாழ்த்து அனுப்பியிருக்கிறார். பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 1985-ஆம் ஆண்டு டிசம்பர் 11-ஆம் தேதி வாழ்த்து அனுப்பியிருக்கிறார். கவர்னர் திரு. குரானா 1985-ம் ஆண்டு டிசம்பர் 4-ஆம் தேதி வாழ்த்து அனுப்பியிருக்கிறார், நம்முடைய தொழில் அமைச்சர் 1985 அக்டோபர் மாதம் 8-ஆம் தேதி வாழ்த்து அனுப்பியிருக்கிறார். ஆனால் முதல்வர் அவர்கள் பிப்ரவரி 4, 1986 இல் வாழ்த்து அனுப்பியிருக்கிறார். வாழ்த்து தாமதமாக வந்தது என்று

நான் குறை சொல்ல விரும்பவில்லை. இந்த மலர் 1986 பிப்ரவரி 4 ஆம் தேதிக்குப் பிறகு வெளியிடப்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

இதிலே தொழிலமைச்சர் அனுப்பிய வாழ்த்தில்

"It is a commendable achievement of TIDCO in having suceessfully implemented *31* Projects in the Joint sector and seven in the public sector."

என்று குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் க. திருநாவுக்கரசு: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சொல்லுகின்ற நேரம் புரட்சித் தலைவர் மருத்துவமனையில் இருந்த நேரம்.

தலைவர் கலைஞர்: அது 1985-ல் இல்லை. தாங்கள் தவறாகச் சொல்லுகிறீர்கள். மேலும் நான் அவர் தாமதமாக வாழ்த்து அனுப்பியதைப் பற்றிக் கூறவில்லையே! இந்த மலர் 1986க்குப் பிறகு வந்தது என்பதற்காகத் தான் குறிப்பிடுகிறேன். இந்த மலரில் "Ariyalur Cement Works: A dry process cement plant was set up with an installed capacity of 5 lakh tonnes per annum. (cement production at a capital cost of Rs. 28.76 crores). The unit commenced commercial production in August 1979. The plant is located at Ariyalur in Ariyalur Taluk of Tiruchirappalli District. The plant provides direct employment to *916* persons in a backward area besides providing indirect employment in areas such as transportation of raw materials, finished goods, etc".

ஆனால் இதே அரியலூர் சிமெண்ட் ஒர்க்ஸ் குறித்து 1985-86 இன்டஸ்ட்ரியல் பாலிசி அண்டு புரோகிராம்ஸ் என்ற தலைப்பில் வைக்கப்பட்ட கொள்கை குறிப்பில்—

"Ariyalur works is a dry process plant having an installed capacity of 5 lakh metric tonnes per annum.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1977லே தொடங்கப்பட்டு-சிமெண்ட் புரொடக்ஷன் ஆகஸ்ட் 1979ல் தொடங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்த நாள் வரை ஆண்டுக்கு 5 லட்சம் மெட்ரிக் டன்ஸ் என்பதை எந்த ஆண்டாவது தொட்டு இருக்கின்றதா என்று பார்த்தால் இல்லை.

தொழிற்சாலை பற்றி பொய் விளம்பரம் ஏன் ?

1979-80ல், 1,15, 919 மெட்ரிக் டன்கள்; 8 மாதங்களுக்கு. 1980-81-ல், 2,46,733 மெட்ரிக் டன்ஸ், 1981-82ல் 2,84,350 மெட்ரிக் டன்ஸ். 1982-83ல் 2,47,300 மெட்ரிக்டன்ஸ், 1983-84, 3,01,366 மெட்ரிக் டன்ஸ், 1984-85ல் 2,84,366 மெட்ரிக்டன்ஸ் ஆகத் தான் இருக்கின்றது. ஆரம்பத்திலே குறிப்பிடப்பட்ட இந்த 5 லட்சம் மெடரிக்டன்ஸ் என்பதைத் தொடவே இல்லை. அது மாத்திரமல்ல.

This unit has been incurring losses. என்றும் அதாவது இது நஷ்டத்திலே நடந்து கொண்டிருக்கின்றது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒரு பப்ளிக் செக்டார். இது நஷ்டத்திலே நடந்து கொண்டிருக்கிறது. இதற்காக ஒரு அழகான மலர் போடப் பட்டிருக்கின்றது. வெளி நாட்டுக்காரர்கள் அந்த மலரை வாங்கிப்பார்த்தால் அது நஷ்டத்திலே ஓடுகின்றதா அல்லது அதிலே உற்பத்தி வருகிறதா என்று தெரிந்து கொள்ளமுடியாது. இந்த நிலையிலேதான் அந்த மலர் இருக்கின்றது.

அமைச்சர் க. இராசாராம்: அரியலூர் சிமெண்ட் ஆலையில் சில சிக்கல்கள் காரணமாக சாம்பல் அதிகமாக

வந்து விடுகிறது என்ற பிரச்சினை காரணமாக—அதிலே தீவிரமாக ஈடுபட்டு, தற்போது அது சரியாக ஓடிக் கொண்டிருக்கின்றது. இந்த ஆண்டு அது லாபத்திலே ஓடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் கலைஞர்: 5 லட்சம் மெட்ரிக் டன் 'டார் ஜெட்' வந்ததா என்பதைப் பற்றித்தான் நான் கேட்கி றேன்.

அமைச்சர் க. இராசாராம்: ஐந்து லட்சம் மெட்ரிக் டன்கள் அளவுக்கு இன்னும் வரவில்லை.

தலைவர் கலைஞர்:- நான் சொல்வதை ஏற்றுக் கொண்டதற்காக நன்றி. இதே மலரில், "ஜாயின்ட் செக்டார் புரெஜெக்ட்ஸ் அண்டர் புரொடக்ஷன்" உற் பத்தியிலே இருக்கின்ற ஜாயின்ட் செக்டார் தொழில்கள் என்கின்ற அந்த தலைப்பில் வருகிற ஒரு தொழிற்சாலை சதர்ன் ஹைட்ரோ கார்பன்ஸ் லிமிடெட், குளத்தூர், புதுக்கோட்டை மாவட்டம். 2 கோடியே 70 லட்சம் ரூபாய் மூலதனத்தோடு இது தொடங்கப்பட்டது. அதிலே 80 பேர்கள் பணியாற்றுகின்றார்கள் என்றெல் லாம் இந்த மலரில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதற்குள் அழகான படம் போட்டு இந்த மலரில் வெளியிட்டிருக் கிறார்கள். நான் கடந்த 28-ம் தேதி அறந்தாங்கிக்கு புதுக்கோட்டை வழியாக சென்றிருந்தேன்.

அப்போது அந்த படத்திற்குரிய அந்த ஆலை அங்கே இருக்கின்றதா என்று பார்த்தேன். இருந்தது. ஆனால் மூடிக்கிடந்தது. ஆனால் இங்கே என்ன சொல்லப்பட்டி ருக்கிறது என்றால் "ஜாயின்ட் செக்டார் புரெஜெக்ட்ஸ் அண்டர் புரெடக்ஷன்" (தயாரிப்பில் இருக்கும் தொழிற் சாலை) என்ற தலைப்பில் அந்த ஆலையினுடைய பெயர் வந்திருக்கின்றது. ஆனால் அது பல மாத காலமாக மூடிக்கிடக்கிறது. பழு தடைந்து, துரிகள் படிந்து அங்கே

உள்ளே கூட செல்ல முடியாத அளவில் இருக்கின்றது. நான் செல்லும் வழியில், சாலை ஓரத்திலேயே அமைந் திருந்ததால் நேரில் சென்று பார்க்க முடிந்தது. ''அசிடிக் ஆசிட்'' தயாரிக்கின்ற அந்த தொழிற் சாலை. எனவே மலரை அழகாகத் தயாரித்து விட்டால் மட்டும் போதாது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடி இருக்கின்றார்கள்.

''மலம் மூடத்தான் மலர் பறித்தேன் என்றால்
குளிர்மலர்ச் சோலை கோவென்று அழாதோ''

என்று பாடியிருக்கின்றார்கள். அது போல, மலர் வெளி யிடுகின்ற நேரத்தில் அதிலே உள்ள தொழிற்சாலைகள் எப்படி இருக்கின்றன என்பதற்கு இன்னும் உதாரணங் கள் தொடர்ந்து மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர் களுக்கு காட்டமுடியும். அவர்கள் இனிமேலாவது நிர் வாகத்தில் உள்ள குறைகளை கண்டறிந்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கின்றேனே அல்லாமல் வேறல்ல.

அமைச்சர் க. இராசாராம்: கார்போரண்டம் தொழிற்சாலை பற்றிச் சொன்னார்கள். அது பற்றி குறிப்பு என்னிடமில்லை.

தலைவர் கலைஞர்:-கார்போரண்டம் அல்ல; ஹைட் ரோகார்பன்ஸ் தொழிற்சாலை—

அமைச்சர் க. இராசராம்-ஆனால் ஒன்றை மட்டும் சொல்கிறேன். இந்த ஆண்டு பொதுத் துறைகள் எல்லாவற்றிலும் லாபம் வரும் வகையில் நான் வேலை வாங்கப் பார்க்கிறேன். அந்த வகையில் தற்போது வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித் துகொள்கிறேன்.

குறள் நெறிக்கு விரோதமான அரசு !

நிதிநிலை அறிக்கையை நாவலர் நிறைவு செய்கிற கட்டத்திற்கு முன்பு நீதி, நேர்மை, சட்டம், திட்டம், ஒழுங்கு, தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வகுத்துத் தந்து ஆட்சி புரிய வேண்டும் என்ற குறள் நெறிக் கருத்திற்கு இணங்க இந்த அரசு செயலாற்றுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதிலேதான், நான், நீதி, நியாயம் இவைகளுக்கெல்லாம் மதிப்பு தராமலும் இவைகளைப் பற்றி யெல்லாம் கவலைப் படாமலும் இந்த அரசு நடைபெறுகிறது என்பதற்கான சில எடுத்துக் காட்டுகளை இந்த மன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

நான் யாரையும் தனிப்பட்ட முறையில் குற்றஞ் சாட்டவோ அல்லது ஆதாரங்கள் இல்லாமல் யார் மீதும் அவதூறு கூறவோ இந்தக் கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க விரும்பவில்லை.

நீதிமன்றம் சில தீர்ப்புகளைப் வழங்கி இருக்கிறது. அந்தத் தீர்ப்புகளை படிக்கும் போது நாவலர் குறிப்பிட்ட அந்தக் குறள் நெறிக்கு ஒப்ப இந்த அரசு நடை பெறுகிறதா என்ற இந்தக் கேள்விக்குப் பதில் கிடைக்கிறதா என்பதை மாத்திரம் ஆய்ந்தால் போதுமானது.

தங்கவேல் என்பவர் ஒரு விவசாயியின் மகன். இவர் பி.எஸ்ஸி. (வேளாண்மை)படிப்பு படிக்கமனு 1984-85ல் செய்திருந்தார். அவர் மனுச் செய்வதற்கு முன்பே அரசாங்கம் 26-8-83-ல் அரசு ஆணை எண் 1531, வேளாண்மை என்ற எண்ணின் படி ஒரு நல்ல திட்டத்தை வகுத்து அறிவித்தது. அது என்னவென்றால் இந்த பி. எஸ்ஸி. (வேளாண்மை) படிக்க விவசாயிகளின் மகன்

களுக்கும், மீனவர்களின் மகன்களுக்கும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஒதுக்கப்பட்ட இடங்கள் அதிகரிக்கப்பட்டன.

நீதிபதி மோகன் தீர்ப்பு

அரசு ஆணை 1640 வேளாண்மை, தேதி 24-8-84 ன் படி, விவசாயிகள், மீனவர்கள் மகன்களை இந்தப் படிப்பிற்காகப் படிக்க தேர்ந்தெடுக்க ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு தன்னுடைய கவனத்தைச் செலுத்தும் என்கிற அந்த சீரிய நோக்கத்தோடு-அந்தத்தேர்வில் தேர்வு செய்யப்படுகிறவர்களைப் பொறுக்கியெடுக்க வேளாண்மைத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், வேளாண்மைத்துறை செயளாளர், ஆகியவர்கள் அடங்கிய குழுவை அரசு முடிவெடுத்து அறிவித்தது. இந்த குழுகூடி பி. எஸ். ஸி வேளாண்மைப் படிப்பிற்குத் தேர்ந்தெடுத்த நபர்கள் குறித்து ஒரு வழக்கு. அந்த வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதி மோகன் அவர்கள் அளித்த தீர்ப்பை மாத்திரம் நான் கூற விரும்புகிறேன்.

"வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கான வழக்கறிஞர் தேர்வு சம்பந்தப்பட்ட பதிவுப் புத்தகத்தை தாக்கல் செய்தார். நான் அதனைக் கவனமாகப் பார்த்தேன். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த பலரது முறையீடுகள் அதிலே இருந்தன. அவைகள் பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இந்தப் பிரிவிலே, அரசாங்கத் துறைகளிலே பணியாற்றக்கூடியவர்களின் வீட்டுப் பிள்ளைகள்— தங்களுக்கு சொந்தத்தில் நிலம் இருப்பது ஒன்றையே ஆதாரமாக வைத்து இடம்பெற்றிருப்பது வியப்புக் குரியதாகும்.

இந்த இடங்களை தனி ஒதுக்கீடாகக் கருதாமல், மற்ற பிரிவுகளின் கீழே மனுச் செய்தவர்களுக்கெல்லாம் இந்தப் பிரிவில் இடம் தரப்பட்டிருக்கின்றது. இது ஒரு மிகப் பெரிய தவறாகும். அரசு ஆணையில் குறிப்பிடிப்பட்டிருப்பதற்கு மாறானதாகும். இந்தப் பிரிவின் கீழ் ஒதுக்கப்படும் போது கிராமங்களிலே இருந்து வந்தவர்களுக்கு முன்னுரிமை தரப்படவேண்டும் என்ற அரசு விதியை தங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டார்களா என்பதே கேள்விக் குறியாக உள்ளது.

எனவே இந்த இரண்டு காரணங்களுக்காக இந்த முழுத் தேர்வும் முறையற்றதாக உள்ளது. அரசு பணிகளிலே பணியாற்றுபவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகள்— மீனவர்கள் குடும்பப் பிள்ளைகளை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற உயர்ந்த குறிக்கோளுடன் இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனவே அந்தக் குழுவின் முக்கிய கடமை அந்தக் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டியதாகும்.

ஆனால் அதுஇந்த பிரச்சினையில் கடைப்பிடிக்கவேயில்லை. அதன் முடிவு என்னவென்றால் — இதிலே செய்யப்பட்ட முழுத் தேர்வையும் செல்லாது என்று ஒதுக்குவதாகத் தான் இருக்க முடியும். ஆனால் துரதிருஷ்டவசமாக, மனுதாரர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கெதிராக மனுப் போடவில்லை.

மேலும் முழுவதையும் தள்ளிவிட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட பல மாணவர்களுக்கு சங்கடங்கள் ஏற்படக்கூடும். எனவே மனுதாரருக்கு மட்டும் பரிகாரம் செய்யலாம். எனவே மனுதாரரை 16-12-85 முதல் பி. எஸ். ஸி. வேளாண்மைப் படிப்பு படிக்க

சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் உத்தர விடுகின்றேன்.''

அமைச்சர் காளிமுத்து:- டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிற குறிப்பில் ஒரு கருத்தைக் கூற விரும்புகின்றேன். வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பம் போடுகிற போது விவசாயிகளின் பிள்ளைகள், அந்தப் பல்கலைக்கழகத்திற்கு ஒரு சான்றிதழ் தரவேண்டும். அதன் அடிப்படையில்தான் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

நீதிபதி தீர்ப்பின் அடிப்படையில் இந்த ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று நானும், அறநிலையத்துறை அமைச்சரும் கலந்திருக்கின்ற குழுவின் மூலம், இப்போது முறைப்படி தகவல் சொல்லப்பட்டிருக்கின்றது.

அரசின் குழுவே ஆணையை மீறும் அவலம் !

தலைவர் கலைஞர்:- நடைபெற்றது தவறு என்பதையும்—அரசு உயர்ந்த நோக்கத்தோடு அமைத்த குழு தன் பணிகளைக் கவனிக்கவில்லை என்பதையும் நீதிபதி மோகன் அவர்கள் சுட்டிக் காட்டியதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன்.

அரசே ஒரு ஆணையை பிறப்பித்துவிட்டு-அந்தக் குழுவிலே இடம் பெற்றிருந்த அமைச்சர் அவர்களும் பொறுப்பேற்றிருந்த குழு, அரசின் ஆணையை மீறி நடந்திருக்கிறது. அரசின் எண்ணத்திற்கு மாறாக நடைபெற்ற காரியத்திற்கு, அரசின் அட்வகேட்-ஜெனரல் அவர்களே வாதிடப் போய் இருக்கிறார். அந்த நீதிபதியே குறிப்பிட்டுள்ள வாசகங்களில் கூற வேண்டுமானால்;

It is surprising that persons working in the Government Service, on the strength of owning required extent of wet - garden or dry land have come to be included under this category.

This is a serious flaw.

When the Government passes an order on reservation it is the bounden duty of the Committee to have kept this G.O. in mind and followed not only the letter of the same, but the spirit as well. But that has not been done at all in this case.

"The resultant position will be that the entire selection will have to be "set aside." But unfortunately, the petitioner has not impleaded all the selected candidates. Besides, setting aside, the entire selection will cause immence hardship to the selected eandidates who are now pursuing the course. Therefore, it appears to be just and proper to provide remedy to the petitioner alone. Accordingly, I hereby direct that the petitioner be admitted to B. Sc., (Agri) Course with effect from *16-12-1985*."

என்று நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார்.

அமைச்சர் காளிமுத்து:- சிறு விவசாயிகளின் மகன்கள் என்று சான்றிதழ் கொடுத்த அடிப்படையில் முழுக்க முழுக்க அந்தத் தேர்வு செய்யப்பட்டது. தேர்வுப்பட்டியலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டுமென்றாலும் விவரங்களைத் தரத்தயார்.

தலைவர் கலைஞர் :-நீதிமன்றத்தில் வழக்கு நடந்த போது நீதிபதியிடம் தரப்பட்ட பட்டியல்களையெல் லாம் அவர்கள் ஆராய்ந்து பார்த்து, நீதிபதி அளித்த தீர்ப்பு, அதுபற்றிய முழு விவரமும் என்னிடம் இருக்

கிறது. அவைகளை நான் தருகின்றேன். அமைச்சரும் பார்க்கலாம். அமைச்சர் தரப்பு வாதங்களையெல்லாம் கேட்ட பிறகு நீதிபதி அளித்த தீர்ப்பைத் தான் நான் இங்கே குறிப்பிட்டிருக்கிறேன்.

அமைச்சர் காளிமுத்து : கலைஞர் அவர்களின் உணர்வைப் புரிந்து கொள்கிறேன். தவறுகள் இருக்கு மானால் அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதோ, மற்றொரு தீர்ப்பு !

மற்றொன்று! இதுவும் நீதி மன்றத்தின் தீர்ப்பை ஒட்டியதுதான். சற்றுத் தாமதமாக வழங்கப்பட்ட தீர்ப்பு என்றாலும் 4-12-85 அன்று அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம். பி. ஏ. படிக்க மாணவர்களை தேர்ந்தெடுத்தது குறித்து உயர் நீதி மன்றத்தில் தலைமை நீதிபதி சந்துர்கர் அவர்களும், இன்னொரு உயர்நீதி மன்ற நீதிபதி வெங்கடசாமி அவர் களும் அளித்த தீர்ப்பு மிகவும் முக்கியமான ஒன்று.

இந்த உயர்நீதிமன்ற தீர்ப்பிற்கு முன்னதாகவே— பல்கலைக்கழகத்தின் தேர்வுக்குழு கூடி தேர்வு பற்றி ஆய்ந்து ஒரு அறிக்கையைத் தாக்கல் செய்த பொழுதும்— தேர்வில் நடைபெற்ற ஊழல் குறித்து விவரமாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

உயர்நீதிமன்றம் அந்தத் தேர்வுக்குழு அளித்த அறிக் கையின் முக்கியமான பகுதிகளையெல்லாம் தன்னுடைய தீர்ப்பிலேயே குறிப்பிட்டிருக்கிறது.

அந்தத் தேர்வுக்குழு அளித்த அறிக்கையில் சொல்லப் பட்டுள்ள முக்கிய குறிப்புகள் என்ன தெரியுமா

MINUTES OF SELECTION COMMITTEE CONSTITUTED FOR SELECTING FULL TIME M. B. A. COURSE.

Date: 21-7-79 7 P. M.

"The following discrepancies were observed and the Committee resolved to record the following facts.

(1) The Committee observed that the marks given by the following Committee Members were erased and changed by some one other than the respective committee members.

(2) The Committee observed that the following candidates' marks were erased and changed by some one other than the respective committee members.

In the light of the observed, changes in the interview marks, the Committee, after discussing with Professor and Head of Management Studies, decided to invite Mr. D. V. Suresh Kumar, Reader, Management Studies. Accordingly Mr. Suresh Kumar was requested to appear before the Committee and the Committee understood that Mr. D. V. Suresh Kumar had erased and changed the marks. During our discussion it was brought to the notice of the Committee that these changes were made by Mr. D. V. Suresh Kumar with the knowledge of the Head of the Department.

This statement was not ratified by the Head of the Department. However, Mr. D.V. Suresh Kumar had

accepted the corrections and was willing to change the marks back to the original positions''.

The following discrepancies were observed in the case of forward caste candidates.

(i) The candidate with Hall Ticket No. 2262 was absent for the test, but he was called for the personal interview and group discussion.

(ii) The candidate with Hall Ticket No. 1088 has not secured enough mark in test to appear in the merit list' but she was called for the interview.

The Committee has observed that the following numbers have secured, enough marks to appear in the merit list but were not called for the interview.

Hall Ticket No. 1183, 1261, 1392.

(அதாவது தேர்வுக்குழு அளித்த மதிப்பெண்கள் யாரோ ஒருவரால் அழித்து, மாற்றப்பட்டதை குழு அறிந்து கொண்டது.)

(இண்டர்வியூ மார்க்கில் மாற்றம் இருப்பது குறித்து தேர்வுக்குழு அந்தத் துறையின் தலைவர். பேராசிரிய ரோடு கலந்து கொண்டு அந்தத் துறையில் பணியாற்றும் டி.வி.சுரேஷ்குமார் என்ற விரிவுரையாளரை அழைத்துப் பேசும் போது, சுரேஷ்குமார் தான் மதிப்பெண்களை அழித்து மாற்றியவர் என்பதைப் புரிந்து கொள்கிறது. துறைத்தலைவர் மறுத்த போதிலும், சுரேஷ்குமார் தவறுகளை ஒப்புக் கொண்டும், மீண்டும் பழைய மதிப் பெண்களையே போட்டு விடுவதாக கூறினார்.)

(2262 என்ற எண் உள்ள மாணவர் தேர்விற்கே வராமல் இருந்தும், அவர் நேர்முகத் தேர்விற்கு அழைக் கப்பட்டார்.)

(1088 எண்ணுள்ள மாணவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு மதிப்பெண்கள் பெறாத நிலையிலும் கூட அவர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டார்.)

(எண்கள் 1183, 1261, 1392 பெற்றவர்கள் போதுமான மதிப்பெண்களுக்கு மேல் பெற்றிருந்த போதிலும், நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படவில்லை).

The Committee observed that one number *(1984)* in the register showing the rank order has been erased and changed. Due to this change the Committee has taken up the task of tracing the relating number and locate the following answer sheets with Hall Ticket No.

Hall Ticket No.	Marks.
2063	*40*
2025	*30*
2030	*71*

Out of the three numbers, the candidate with the Hall Ticket No. *2025* was given the mark of the cand-i date with Hall Ticket No. *2030*.

மூடி மறைக்கப்பட்ட மோசடி!

The committee observed that due to this change of Test Mark from one person to another the candidate with Hall Ticket No. *2025* was called for the interview and the candidate with Hall Ticket No. *2030* was not called for the interview. The candidate with Hall Ticket No. *2025* was able to appear in the final list due to this change of marks from another candidate.

(1498 எண் உள்ள வேட்பாளர் தேர்வு பெற்றிருந்தும், அவர் பெயர் அழிக்கப்பட்டு மாற்றப்பட்டுவிட்டது.

2030 என்ற எண் உள்ள மாணவர் பெற்ற 71 மதிப் பெண்கள் 2025 என்ற எண் உள்ள மாணவருக்கு மாற் றப்பட்டு விட்டது. இதன் விளைவாக 71 மதிப்பெண் பெற்றவர் புறக்கணிக்கப்பட்டு, 30 மதிப்பெண் பெற்ற வர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.)

The Committee has accidentally got hold of a record containing the list of Candidates, tentatively worked out for identifying the Probable Candidates.

The Committee has noticed that the exercise was done independently probably before the Committee met on 17/17/79.

For selection of Candidates Mr. D. V. Suresh Kumar has agreed that he has worked out the list with the knowledge of the Professor. The Committee has taken the above document and observed that this document he handed over to the Vice-Chancellor immediately.

சுரேஷ்குமார்தான் தவறுகளைச் செய்தார் என்பதற் கான ஆதாரம் ஒன்று கிடைத்தது. அதன் பேரில் அவரைக் கேட்டபோது பேராசிரியருடைய ஒப்புதலோடு தான் தவறு செய்தேன் என்பதை ஒப்புக் கொண் டார். எனவே குழு அனைத்தையும் உடனடியாக துணை வேந்தரிடம் தர முடிவு செய்தது.)

இவ்வளவு தவறுகளும், மோசடிகளும் நடைபெற்றது குறித்து, ஆய்வுக்குழு-தேர்வுக்குழு-விசாரித்து தெளி வான அறிக்கையை துணை வேந்தர் அவர்களிடம் தந்தும், முன்னாள் துணை வேந்தர் எந்த விதமான நட வடிக்கையும் எடுக்கவில்லை.

யாருக்கு இடம் தர இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டன? யாருடைய தூண்டுதல் மீது இந்த

ஏற்பாடு? அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் அவர்கள் வேறு யார் யாரை எல்லாம், காட்டிக் கொடுக்கக்கூடும் என்று பயந்து நடவடிக்கை எடுக்கப் படாமல் விடப்பட்டதா என்பதெல்லாம் எனக்குத் தெரி யாது.

எனவே இது குறித்து கவர்னரிடம் முறையீடு தரப் பட்டு, அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத தால், ஒரு பத்திரிகையாளர்—அரிஎன்பவர்—உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அதன் மீது தலைமை நீதிபதியும் இன்னொரு நீதிபதியும் சேர்ந்து தீர்ப்பளித் திருக்கிறார்கள்.

அந்தத் தீர்ப்பில், வழக்கை நீதிபதி தள்ளுபடி செய்து விட்டார். என்ன காரணத்தால் என்றால் காலம் கடந்த வழக்கு என்பதால் தள்ளினாலும்கூட, நீதிபதிகள் தங்கள் தீர்ப்பின் இறுதியிலே என்ன கூறுகிறார்கள் என்றால்—

நீதிபதிகள் அறிவுறுத்தியும் கிடைக்காத நீதி

In these circumstances, when an allegation with regard to the tampering of marks of certain candidates had been brought to the notice of this Court, not-withstanding the fact that this had taken place in the year *1979* in the interest of the purity of the academic atmosphere of the university and equally in the interest of the fair name and reputation of this Madras University, we think the best Course for us would be to send a copy of this Judgement to the Chancellor along with the a copy of the minutes which are kept in the Sealed envelope for such action as the Chancellor may deem fit to take in this case.

"மதிப்பெண்கள் சில மாணவர்களுக்கு மாற்றப் பட்டது குறித்து, இந்த நீதிமன்றத்தில் தரப்பட்ட

குற்றச்சாட்டில், இது நடை பெற்றது 1979ம் ஆண்டு என்பதாலும், பல்கலைக்கழகத்தின் பெருமை கெட்டு விடக் கூடாது என்பதாலும், இப்போதுள்ளதில் நல்ல வழி என்னவென்றால்— இந்தத் தீர்ப்பினை வேந்தர் என்ற முறையில் கவர்னருக்கு அனுப்பி அவர் தேவை யான நடவடிக்கை எடுப்பார் என்று எதிர்பார்ப்போ மாக,''

என்று தீர்ப்பு எழுதியுள்ளார்.

இவ்வாறு உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி தீர்ப் பளித்து—தீர்ப்பின் நகலை பல்கலைகழகத்தின் வேந்தர் என்ற முறையில் கவர்னருக்கு அனுப்பி நான்கு மாதங்கள் ஆகின்றன. இன்னும் அது குறித்துஎந்த விதமான நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இறுதியாக, மற்றொரு தீர்ப்பையும் நான் குறிப்பிட வேண்டும். ''பிரிண்டிங் டெக்னாலஜி''யில் ஒருவருக்கு இடம் அளிக்காதது குறித்து வேறு அவையில் நடை பெற்ற விவாதத்துக்குரியதை இங்கே பிரச்சினையாக்க நான் விரும்பவில்லை.

பிரிண்டிங் டெக்னாலஜியில் நடைபெற்ற ஒரு சம்ப வம். பிரிண்டிங் டெக்னாலஜியில் லித்தோகிராபி படிக்க மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அவர்கள் எப்படி தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள் என்றால்—எஸ். எஸ். எல் சி. தேர்வில் ஆங்கிலத்திலும் விஞ்ஞானத்திலும் பெற்ற மதிப்பெண்களைக் கூட்டி, அதனைக் கணக்கிலே எடுத்துக் கொண்டு—அதனைத் தவிர இண்டர்வியூவிற்கு மூப்பது மதிப்பெண்கள் மொத்தமாக வைத்து—அதிலே பெறக் கூடிய மதிப்பெண்களையும் சேர்த்து—யார் அதிக மாக மதிப்பெண் பெறுகிறார்களோ அவர்களுக்கு இடம் அளிக்கப்பட வேண்டும்.

இப்படி தேர்வு செய்த போது—நிறுவனங்களால் அனுப்பப்பட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி மாணவர் பெற்ற மதிப்பெண்கள் 137. இதிலே டி. சீனிவாசன் என்பவர் எஸ். எஸ். எல். சி. யில் ஆங்கிலத்தில் 62ம், விஞ்ஞானத்தில் 58ம் ஆக மொத்தம் 120 மதிப்பெண்கள் பெற்றிருக்கிறார். அவருக்கு' இண்டர்வியூவில் ஆறுமதிப் பெண்கள் கிடைத்திருக்கின்றன. ஆக மொத்தம் இரண்டிலும் சேர்த்து அவருக்கு கிடைத்த மதிப்பெண்கள் 126. ஆனால் அந்தப் படிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட 137 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால் 126 மதிப்பெண் பெற்ற சீனிவாசன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார். எப்படியென்றால் அவர் 140 மதிப் பெண்கள் பெற்றதாக பதிவுச் செய்யப்பட்டு, அவருக்கு இடம் தரப்பட்டிருக்கின்றது.

முறையான விளக்கம் எதற்கேனும் உண்டா ?

அதைப் போலவே எஸ். சிவக்குமார் என்பவர் எஸ். எஸ். எல். சி: தேர்வின் அடிப்படையில் பெற்ற மதிப் பெண்கள் 123 அவருக்கு இண்டர்வியூவில் கிடைத்த மதிப்பெண்கள் இரண்டு. ஆக மொத்தம் 125 மதிப்பெண் கள். ஆனால் அவருக்கு 143 மதிப்பெண்கள் பெற்றதாகப் போட்டு, அவருக்கு இடம் தரப்பட்டிருக்கின்றது.

அடுத்து, ஆறுமுகச் செல்வம் என்பவர் எஸ். எஸ். எல். சி. யில் வாங்கிய மதிப்பெண்கள் அடிப்படையில் 110 மதிப்பெண்களைப் பெற்றிருக்கிறார். இண்டர்வியூ வில் அவர் பெற்ற மதிப்பெண்கள் 8½ ஆக மொத்தம் 118½ மதிப்பெண்கள் தான். அவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் 137 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால் பெற்றதோ 118ல் தான் இருந்தா

லும் அவருக்கு 137 என்று அந்த கடைசி மதிப்பெண் போடப்பட்டு, அவருக்கும் இடம் தரப்பட்டிருக்கின்றது.

இண்டர்வியூவின்போது பதிவு செய்யப்பட்ட — அதுவும் நேர்முகத் தேர்விலே சென்றவர்களே பதிவு செய்த — மார்க்குகளின் பட்டியலே என்னிடம் இருக்கின்றது.

நீதிமன்றத்திலே அவர்களே அதனைத் தங்கள் கையெழுத்து என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதனை 'ரப் ஷீட்' என்றெல்லாம் நீதி மன்றத்தில் சொல்லப்பட்டது. 'ரப்' என்பதற்கு 'அன்பாலிஷ்டு' என்று தான் அகராதியில இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் அனுமார் படம் 'ரப்' பாக போடுவதாக வைத்துக் கொண்டால் பிறகு அதை பூரணமாக ஆக்கும்போது, அது அனுமார் படமாகத்தான் இருக்க வேண்டுமே தவிர ராமர் படமாக மாற்றி போட்டால் அது தவறாகும். எனவே 'ரப்ஷீட்' என்று கூறினாலும் கூட, பிறகு அதனை உண்மையாகும் போது முதலிலே அந்த 'ரப்ஷீட்'டில் என்ன மதிப்பெண்கள் குறித்தார்களோ, அதனைத்தான் பின்னர் தயாரித்ததாக கூறும் மதிப்பெண் பட்டியலிலும் குறித்துக் கொண்டிருக்கவேண்டும். அதற்கு மாறாக அந்தப் பட்டியலில் மதிப்பெண்களை உயர்த்திக் கொண்டால் அது தவறாகும்.

அதனை 'ரப் ஷீட்' என்று கூறியபோதிலும் உச்ச நீதிமன்றம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. (irregular) தவறு என்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

அந்த அடிப்படையில் மதிப்பெண்கள் குறைவாக பெற்றார் என்று கல்லூரி முதல்வரால் இடம் மறுக்கப் பட்ட வேல்முருகன் என்ற மாணவருக்கு இடம் அளிக்க ஒப்புக்கொண்டு, வழக்கு உச்சநீதிமன்றத்தில் சமரசமாக முடிக்கப்பட்டு விட்டது. 129 மதிப்

பெண்களே பெற்றிருக்கிறார் என்று இவர்களால் மறுக் கப்பட்ட மாணவருக்கு,சமரசத்தின்பேரில் இடம்கொடுத் திருக்கிறார்கள். எப்படி சமரசத்திற்கு ஒத்துக் கொண் டார்கள்? இவர்கள் மீது தவறு இல்லை என்றால் சமர சத்திற்கு ஏன் ஒத்துக் கொள்ள வேண்டும்? முறைகேடு என்பதை ஏன் ஒத்துக் கொள்ள வேண்டும்?

அந்த மாணவர் இடம் கிடைத்த பிறகும்—உயர்நீதி மன்றத்தில் மற்றும் ஒரு வழக்கு—மதிப்பெண்களைத் திருத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுத் தொடுக்கிறார்.அந்த வழக்கிலேகல்லூரி யின் பிரின்சிபால் தாக்கல் செய்த அபிடவிட் மனுவிலே அவர் என்ன குறிப்பிடுகிறார் தெரியுமா?

வழக்குகளைத் திரும்பப் பெறுங்கள்

I, K. Mohan Rao, do hereby solemnly affirm and sincerely state as follows:—

I am the principal, Institute of Printing Technology, Madras.

"It is true that I expressed my regret since it was pointed out by their Lordships of the Supreme Court that it is an Irregularity and the Supreme Court was pleased to accept my apology."

அதாவது சுப்ரீம் கோர்ட் என்னுடைய மன்னிப்பை ஏற்றுக் கொண்டு விட்டது என்று உயர்நீதி மன்றத்தில் பிரின்சிபாலே ஒப்புக்கொண்டிருக்கிறார். அது மாத்திரம் அல்ல; மேலும் அவர் அந்த அபிடவிட் மனுவிலே குறிப் பிடுக்கின்றார்.

"I submit that since it is ture that the hand writing s mine and since the Supreme Court pointed out that

such procedure is irregular, I sincerely expressed regret".

ஆக பிரின்சிபால் அவர்களே உச்சநீதிமன்றத்தில் நிபந்தனையற்ற மன்னிப்பு கோரிப் பெற்றிருக்கின்றார். வருத்தம் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்த முறை கேட்டிற்கும் அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது என்று பார்த்தால், எந்த நடவடிக்கையும் எடுக் கப்படவில்லை. ஏதோ அவருக்கு நல்லாசிரியர் விருது தரப்பட்டதாக நான் பத்திரிக்கையில் செய்தி பார்த் தேன். உண்மை விபரம் எனக்குத் தெரியாது.

எனவே இறுதியாக நான் ஒன்றே ஒன்றை மாத்திரம் கூறி முடிக்க விரும்புகின்றேன்.

பழிவாங்கும் போக்கினைக் கைவிடுங்கள்!

இந்த அரசைப் பொறுத்தவரையில் நான் மிகவும் அன்போடு கேட்டுக் கொள்கின்றேன். எரிச்சல் கொண்டு பேசுவது அல்லது யாரையும் பழி வாங்குவது என்ற முயற்சியில் இந்த அரசு தன்னுடைய தொடர் நடவடிக்கைகளை வைத்துக் கொள்ளாமல் அவைகளுக் கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாதவரம் பால் பண்ணை தொழிலாளர் மீது பழி வாங்குகின்ற போக்கு—நீதிமன்ற தீர்ப்பிற்குப் பிறகும் இன்னமும் நீடிக்கின்றது. அது முறையல்ல. அந்தத் தொழிலாளர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதைப் போலத் தலைமைச் செயலக ஊழியர்கள் மீது போடப்பட்டுள்ள வழக்கு; அவர்களைத் தற்காலிக மாக தள்ளி வைத்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை; அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அச் சுறுத்தல்கள்; இவைகளிலிருந்து அவர்களை விடுவித்து தலைமைச் செயலகம் சீராகச் செயல்பட வழி வகுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

உள்ளாட்சித் தலைவர்களுக்கு மதிப்பளியுங்கள்

உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் எல்லாம் முடிவுற்று எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆங்காங்கே பொறுப்புகளை வகிக்க இருக்கிறார்கள். நான் அண்மையிலே அறந்தாங்கி சென்றிருந்தேன். அறந்தாங்கியில் நடைபெற்றது நாவலர் அவர்களுக்குக் கூடத் தெரியும். திரு. ஏ. பி. ஆர். ஜனார்த்தனம், எல். இடி. டி. டி. என்பவர் நீண்ட காலமாக, 20 ஆண்டுக் காலமாக ஆசிரியராக இருந்தார். 7 ஆண்டுக் காலமாக துணைத் தலமை ஆசிரியராகப் பொறுப்பேற்று பணியாற்றிருக்கிறார். இந்த தேர்தலுக்காக அவர் பதவிவிலகி தேர்தலில் நின்று அறந்தாங்கி நகராட்சியிலே நகராட்சித் தலைவராக வெற்றி பெற்றிருக்கிறார்.

அந்த நகராட்சித் தலைவர் ஏற்கெனவே பள்ளி ஆசிரியராகவும் இருந்தார், துணைத் தலைமையாசிரியராகவும் இருந்தார், என்ற காரணத்திற்காக அறந்தாங்கி அரசினர் மகளிர் மேல் நிலைப் பள்ளியில் நடைபெற இருந்த ஒரு ஐம்பெரும் விழாவிற்கு அழைக்கப்பட்டிருந்தார். ஐம்பெரும் விழா என்றால் ஏதோ அரசியல் விழாவல்ல. இலக்கியமன்ற விழா, சிறுசேமிப்பு விழா, பள்ளியாண்டு விழா-என்று இப்படி ஐந்து விழாக்களை ஏற்பாடு செய்து அந்த நகராட்சித் தலைவருமான திரு. ஏ. பி. ஆர். ஜனார்த்தனம் அவர்களை அழைத்திருந்தார்கள். அந்த விழா 24-3-86 அன்று நடைபெறுவதாக இருந்தது.

ஆனால் 24-3-1986 அன்று ஒரு முக்கிய அறிவிப்பு என்று கரும்பலகையில் எழுதி ''பள்ளி சார்பில் இன்று நடைபெறுவதாக இருந்த ஐம்பெரும் விழா தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஒத்தி வைக்கப்பட்டது'' என்று அறிவிக்கப்பட்டது. இதைக் குறித்து மாண்புமிகு

டாக்டர் நாவலர் அவர்கள் விசாரித்தால் தெரிந்து கொள்ள முடியும். அறந்தாங்கி பட்டுக்கோட்டைக்குப் பக்கத்தில்தான் இருக்கிறது. விசாரித்தால் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். அதற்குக் காரணம் அங்கே இருக்கிற சி. ஈ. ஓ, பள்ளி அதிகாரி, ஆசிரியர்களை அச்சுறுத்தி அவரே அதற்காக உத்தரவிட்டு எப்படி நகராட்சித் தலைவரை வைத்து நீங்கள் விழா நடத்த லாம் என்று மிரட்டியிருக்கிறார்,

நகராட்சித் தலைவர் ஒருவர் நகராட்சியில் பள்ளி விழாவுக்குச் செல்வது என்பது அவ்வளவு பெரிய குற்றமா? அப்படியென்றால் இப்போது தேர்ந்தெடுக் கப்பட்டுள்ள நகராட்சித் தலைவர்களை, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை இந்த அரசு எப்படி நடத்தப் போகிறது என்பதற்கு இது ஒரு முன்னுதாரணமாக ஆகிவிடாதா என்று கூற விரும்புகிறேன்.

எனவே இந்த நிலைமைகளை எல்லாம் விட்டு விட்டு அரசு செம்மையாக சீராக ஆட்சி நடத்த வேண்டும். அதற்காகத்தான் இத்தனை குறைபாடுகளை நான் எடுத்துக் காட்டினேனே தவிர வேறு அல்ல என்று தெரி வித்துக் கொள்வதோடு, நேரம் அதிகமாகி விட்டது-மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் அடிக்கடி என்னைப் பார்க்கிறார் என்பதைச் சொல்லி-இன்னும் நிறையப் பேசவேண்டும் என்று நான் விரும்பினாலும், இன்னும் பல விஷயங்களைப் பற்றியும் 11 பேர்களைப் பற்றியும்.....

மாண்புமிகு மேலவைத் தலைவர்:- பேசுகிற உறுப்பினர்கள் அவைத் தலைவரைப் பார்த்துப் பேசு வதும், தலைவராக இருப்பவர் பேசுபவரைப் பார்ப் பதும் இங்கே மரபு என்பதைத் தவிர வேறு பொருள் அதற்கு இல்லை என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

தலைவர் கலைஞர் :-நேரம் அதிகமாகி விட்டது. நான் இன்னும் பேச வேண்டியது ஏராளமாக இருக்கின்றது. பேச வேண்டியது இன்னும் அதிகம் என்றாலும்- எனக்குள்ள சங்கடம் எல்லாம்- நான் ஏதாவது பேசப் போய்- பதினோறு பேர் பதவியிலிருந்து விலகுகின்ற நேரத்தில் அந்தப்பழி என்மீது வந்து சேரக்கூடாது என் பதற்க்காக நான் இத்துடன் நிறுத்திக் கொள்கின்றேன்.

